Khadi Emporium, Madurai

* 262 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Khadi Emporium at Madurai has started functioning; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எம். தேவராசன் : மதுரையில் கதர் விற்பனை நிலையம் ஏற்படுத்த கதர் வாரியம் ஒரு இடத்தை வாங்கியுள்ளதாகத் தெரிகிறதே, என்ன விலையில் வாங்கப்பட்டது ? அந்த இடத்திற்கு வரலாற்று மூக்கியத்துவம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மதுரை மேலமாசித் தெரு 271–எ என்ற கட்டிடத்தை கதர் வாரியம் வாங்கியுள்ளது. அந்தக் கட்டிடத்தை வாங்குவதற்கு ரூ.1·31 லட்சமும், அதைப் புதுப்பித்து செப்பனிட ரூ.1·69 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தபோது அந்த இடத்தில்தான் முதன் முதலில் அரை ஆடை அணிவதற்கு முடிவு செய்தார் என்கிற வரலாற்று அடிப்படையில் அதை அந்த நினைவுச் சின்னமாக ஆக்கவேண்டுமென்ற முறையில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : வருபவர்கள் வந்து பார்த்துச் செல்வதற்குறிய இடமாக அதை அமைக்கப்போகிறார்களா ? அல்லது அங்கே கதர் போன்ற பொருள்களை விற்பனை செய்வதற்கும் அந்த இடத்தில் ஏற்பாடு செய்யப்போகிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அந்தக் கட்டிடத்தின் முகப்புப் பகுதியில் ஏற்பட்டிருகிற பழுதுகளை மாத்திரம் செப்பனிடுவதற்கும், அந்தக் கட்டிடத்தின் பின் பகுதியை மாற்றி கட்டி அங்கே கதர் விற்பனை நிலையத்தை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கைக்குத்தல் அரிசி நிலையங்கள்.

***263.—வினா :** திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு **அறநிலையத்துறை** அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு **விடையளிப்பாரா :**